DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.73/2024 and Spl.SC.No.90/2024

PROSECUTION WITNESS No - PW- 4

| | | | |
|---|---|---|---|
| Name : | அனுஷா மனோகரி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

1வது, 3வது மற்றும் 4வது எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>சாட்சி காணொலி வாயிலாக ஆஜராக அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் காணொலி வாயிலாக முதல் விசாரணை :</u>**

நான் தற்சமயம் மதுரை, அவனியாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 29.04.2021ல் மானாமதுரை வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது எனது கட்டுப்பாட்டில் வரும் மானாமதுரை காவல் நிலைய குற்ற எண். 60/2019 தொடர்புடைய வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில் கடந்த 30.04.2021ல் சிவகங்கை, மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்படி குற்ற நிகழ்வு தொடர்பாக 200 குவிமுச பிரிவின் கீழ் தனிநபர் புகார் ஒன்றை எதிரிகள் ராஜா, ராஜேஸ்வரன், சேகர், செல்வராஜ் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்தேன். மேற்படி தனிநபர் புகார் **அ.சா.ஆ.**11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கில் தனிநபர் புகார் தாக்கல் செய்வதற்கு முன் இவ்வழக்கின் சாட்சிகளை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா

என்றால் ஏற்கனவே அசல் வழக்கில் சார்பு ஆய்வாளர் விசாரித்ததால் நான் தனியாக யாரையும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு தொடர்பாக கனிமவள அதிகாரிகளிடம் நான் தனியாக தகவல் சொன்னேனா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் சரிவர புலன் விசாரணை செய்யாமல் வைத்திருந்த வழக்கு விசாரணை கோப்பை மேலோட்டமாக பார்த்து நான் தனிநபர் புகார் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.09 17:03:31 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை